20-06-2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென்னையை காக்கும் தக்காளி விவசாயிகளின் அசத்தல் 'ஐடியா'



திண்டுக்கல்:திண்டுக்கல் பகுதி விவசாயிகள் தென்னையை பாதுகாக்கும் வகையில் ஊடுபயிராக தக்காளி பயிரிட்டுள்ளனர்.திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், வத்தலக்குண்டு, ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் அதிகளவில் தென்னை மரங்கள் உள்ளன. அவற்றுக்கு தேவையான நீர், உரம் அளிக்காவிட்டால் விளைச்சல் பாதிக்கப்படும். வறட்சியான நேரங்களில் நீர் பற்றாக்குறையால் விவசாயிகள் தென்னைகளை சரியாக பராமரிப்பதில்லை. மேலும் தென்னை மரங்களுக்கு அடியில் நிழல் விழுவதால், விவசாயிகள் ஊடுபயிர் பயிரிடாமல் இருந்தனர்.தற்போது குறைந்த சூரியஒளி தேவையுள்ள தக்காளியை தென்னைக்கு ஊடுபயிராக அஞ்சுகுழிப்பட்டி விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இதன்மூலம்

தக்காளிக்கு விடப்படும் நீர், உரம் தென்னை மரங்களுக்கும் கிடைக்கிறது. இதனால் இளநீர் விளைச்சல் அதிகரித்துள்ளது.

சூரியஒளி தாக்குதல் அதிகம் இல்லாததால் தக்காளி செடிகளும் பாதிக்கப்படுவதில்லை.விவசாயி பி.ஜான்சன் கூறியதாவது: புதிய முறையில் தக்காளிக்கு மட்டும் செலவு செய்தால் போதும். தென்னை மரங்களை தனியாக பராமரிக்க தேவையில்லை. ஒரு ஏக்கரில் 7 டன் தக்காளி கிடைக்கிறது. சாதாரணமாக ஒரு தென்னை மரத்திற்கு 120 இளநீர் காய்க்கும். புதிய முறையால் 200 காய்க்கிறது. இந்த முறையில் கூடுதலாக ரூ.1.5 லட்சம் லாபம் கிடைக்கிறது, என்றார்.

## உணவுகளில் உப்பு, சர்க்கரை:முறைப்படுத்த அரசு அதிரடி

புதுடில்லி:நம் நாட்டில் விற்பனையாகும் உணவுப் பொருட்கள், தரமானதாக உள்ளனவா என்பதை ஆய்வு செய்யும் நடவடிக்கைகளில், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமான, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., தீவிரமாக களமிறங்கி உள்ளது.

சமீபத்தில், எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:பீட்சா போன்ற உணவுப் பொருட்களில், அவற்றின் சுவையை அதிகரிப்பதற்காக, சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்புச் சத்து தொடர்பான வேதிப்பொருட்கள், அதிகம் கலக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பான வழிகாட்டும் குறிப்புகளை உருவாக்குவதற்காக, உணவு கட்டுப்பாடு நிபுணர்கள், எய்ம்ஸ் மருத்துவமனை யைச் சேர்ந்த டாக்டர்கள் உட்பட, 11 பேர் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்படவுள்ளது. இந்த குழு, ஒவ்வொரு உணவுப் பொருட்களிலும் இருக்க வேண்டிய சர்க்கரை, கொழுப்பு, உப்பு போன்ற வற்றின் அங்கீகரிக்கப்பட்ட சதவீதம் குறித்து, வழிகாட்டும்

குறிப்புகளை அளிக்கும். அதன் அடிப்படையில் உணவுப் பொருள் விற்பனை மையங்கள், உணவுப் பொருட்களை தயாரிக்க வேண்டும்.

## தென்காசியில் 4 செ.மீ., மழை

சென்னை;தமிழகத்தில் கடந்த, 24 மணிநேரத்தில், பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, தென்காசி, வால்பாறை மற்றும் நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில், 4 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.அடுத்த, 24 மணி நேரத்துக்கு, வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும்' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது. மத்திய வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால், சென்னையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது, என்றும் அறிவித்துள்ளது.

## வேளாண் பொருட்கள் விற்பனை செய்யும்வியாபாரிகள் நேரடி உரிமம் பெற வாய்ப்பு

தர்மபுரி, :தர்மபுரி மாவட்டத்தில், வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்பவர்களின் இடத்துக்கு நேரடியாக சென்று, பணியாளர்கள் உரிமம் அளிப்பதை, வியாபாரிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என, வேளாண்மை விற்பனை குழு அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.இது குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, துவரை, கொள்ளு, மொச்சை, மணிலா, எள், ஆமணக்கு, தேங்காய், பருத்தி, வெல்லம், மரவள்ளி, உருளைக்கிழங்கு, புளி ஆகியவற்றை விற்பனை செய்வோர் உரிமம் பெறுவது அவசியமாகும். ஒரு நிதியாண்டில், ஐந்து லட்ச ரூபாய்க்கு மேல் வணிகம் செய்பவர்கள், மொத்த வியாபாரிகள் எனவும், இரண்டு லட்சம் முதல், ஐந்து லட்ச ரூபாய் வரை விற்பனை

செய்பவர்கள் இதர வியாபாரிகள் எனவும், இரண்டு லட்ச ரூபாய்க்கு, குறைவாக விற்பனை செய்வோர் சிறு வியாபாரிகள் எனவும், பிரிக்கப்பட்டுள்ளனர்.மொத்த வியபாரிகள், மூன்று ஆண்டுக்கு ஒரு முறை, 300 ரூபாய், இதர, சிறு வியாபாரிகள், ஆண்டுக்கு முறையே, 75 ரூபாய், சில்லரை விற்பனையாளர்கள், ஆண்டுக்கு, 25 ரூபாய் செலுத்தி உரிமம் பெற்றுக் கொள்ளலாம். உரிமம் பெறாமல், வேளாண் பொருட்களை விற்பனை செய்வது, தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை சட்டத்தின்படி குற்றமாகும்.இதுவரை உரிமம் பெறாத வியாபாரிகளுக்காக, அவர்களின் வியாபார இடத்திற்கு நேரடியாக சென்று உரிமம் வழங்கும் பணியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வியாபாரிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். இது தொடர்பாக, தர்மபுரி விற்பனைக் குழு அலுவலகத்தை, 04342-260971 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## ஊட்டியில் பருவமழை தீவிரம் காய்கறி விவசாயம் துரிதம்

ஊட்டி:ஊட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று பருவ மழை துவங்கியதால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது.நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்துவருகிறது.நேற்று தென்மேற்கு பருவமழை துவங்கியது. இதனால், ஊட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் மேகமூட்டத்துடன் குளிரான காலநிலை நிலவியது.முக்கிய நீர் ஆதாரங்களில், தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தேயிலை தோட்டங்கள், காய்கறி தோட்டங்கள் உரமிடுவதற்கு ஏதுவாக மழை அமைந்தது. ஊட்டி எமரால்டு அருகே கேர்ன்ஹில் பகுதியில், சாலையோர மரம் விழுந்ததால், மின்தடை ஏற்பட்டது. காய்கறி தோட்டங்களில் பணிக்கு செல்லும் பெண்கள், 'பிளாஸ்டிக்' போர்வையின் பாதுகாப்புடன் பணிகளில் ஈடுபட்டனர்.

## வாழை வணிக வளாகத்தில் 518 வாழைத்தார் ஏலம்

திருச்சி, :திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் நடந்த ஏலத்தில், 518 வாழைத்தார்கள், 45 ஆயிரத்து, 300 ரூபாய்க்கு ஏலம் போனது.திருச்செந்துறை வாழை வணிக வளாகத்திற்கு சென்னக்கரை, குழுமணி, அல்லூர், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், பெரியகருப்பூர், சின்னகருப்பூர், அதவத்தூர், அந்தநல்லூர், போசம்பட்டி, முள்ளிகுறும்பூர் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.மாவட்டத்தின், பல பகுதிகளில் இருந்த வந்திருந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். 518 வாழைத்தார்கள், 45 ஆயிரத்து, 300 ரூபாய்க்கு ஏலம் போனது. எவ்வித தரகும் இன்றி, விவசாயிகளுக்கு உடனே பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.ஏலத்தில், ரஸ்தாளி அதிகபட்சமாக, 245 ரூபாய்க்கும், பூவன் அதிகபட்சமாக, 210 ரூபாய்க்கும், பச்சலாடன் தார் அதிகபட்சமாக, 240 ரூபாய்க்கும், மொந்தன், 55 ரூபாய்க்கும், ஏலரிசி அதிகபட்சமாக, 200 ரூபாய்க்கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும், 23ம் தேதி நடக்கிறது. * துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 1,124 கிலோ பருத்தி, 35 ஆயிரத்து, 893 ரூபாய்க்கு ஏலம் போனது. ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக, 39 ரூபாய்க்கும், சராசரியாக, 37 ரூபாய்க்கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும், 24ம் தேதி நடக்கிறது.

## 163 மெட்ரிக் டன் விதை நெல் தயார்மாவட்ட கலெக்டர் தகவல்

கரூர், :கரூர் மாவட்டத்தில், 163 மெட்ரிக் டன் விதை நெல் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது, என கலெக்டர் ஜெயந்தி, தெரிவித்தார்.இது குறித்து அவர் தெரிவித்தாவது:கரூர் மாவட்டத்தின், ஆண்டு சராசரி மழை, 652.2 மி.மீ., நடப்பாண்டு ஜூன் மாதம் வரை சராசரி மழையான 155.3 மில்லி மீட்டருக்கு, 308.4 மி.மீ., மழை கிடைக்க பெற்றுள்ளது. மழையை பயன்படுத்தி பெரும்பாலான இடங்களில்

விவசாயிகள் கோடை உழவு செய்துள்ளனர்.அனைத்து வேளாண் மை விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகளான பி.பி.டி-5204, கோ-50 ஆகியவை, 163 மெட்ரிக் டன், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நெல் இயக்கத்தின் மூலம், 10 ஆண்டுகளுக்கு குறைவாக உள்ள ரங்களுக்கு மட்டும் கிலோ, 10 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்க தயார் நிலையில் உள்ளது.சிறுதானிய இயக்கத்தின் மூலம் சான்று பெற்ற கம்பு ரக விதை கோ9, 15 மானியத்தில் வழங்கப்பட உள்ளது. பயறு வகை விதைகளான கோ-7,எல்.ஆர்.ஜி.41 ஆகிய துவரை ரகங்களும், வம்பன்- 4, வம்பன்- 5 ஆகிய உளுந்து விதைகளும், கோ 7 பாசிப்பயறு ஆகிய சான்று பெற்ற பயறு விதைகள் மொத்தம், 30 மெட்ரிக் டன், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், பயறு வகை திட்டத்தின் கீழ் ஒரு கிலோ, 25 ரூபாய் மானியத்தில் வினியோகம் செய்ய, தயார் நிலையில் இருப்பில் உள்ளது. எண்ணெணை வித்து இயக்க திட்டத்தின் கீழ் கிலோ ஒன்று, 12 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி சான்று பெற்ற விதைகறை பெற்று பயனடையலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

கரூர், :""தமிழக முதல்வர் உத்தரவுப்படி விவசாயிகளின் நலன் கருதி, கரூர் மாவட்டத்தில், சம்பா பருவத்தில் விளைந்துள்ள நெல்லை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது," என்று கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார்.கரூர் மாவட்டம் குளித்தலை தாலுக்கா நங்கவரம் பங்களாத்தெரு, நச்சநல்லூர், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா கோவக்குளம், பஞ்சப்பட்டி, கட்டளை பஞ்சாயத்து அலுவலகம், கரூர் தாலுக்கா

சுக்காலியூர் செக் போஸ்ட் தோரணக்கல்பட்டி, அரவக்குறிச்சி தாலுக்கா சின்னதாராபுரம் சமுதாயக்கூடம், மண்மங்கலம் தாலுக்கா ஆண்டாங்கோவில் தெற்கு மொச்சக்கொட்டாம்பாளையம் பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் தொகையும் சேர்த்து நெல் கிரேடு "ஏ' ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,470 ரூபாயும், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,410 ரூபாயும் வழங்கப்படும். நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் மின்னணு தராசு மூலம் சரியான அளவில் எடையிட்டு, 17 சதவீதம் ஈரப்பதத்துடன் அனுமதிக்கு உட்பட்டு நெல் கொள் முதல் செய்யப்பட்டு அதற்குண்டான தொகை வழங்கப்படும்.எனவே, விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை மேற்கண்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெற வேண்டும்.இவ்வாறு கரூர் கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார்.தொடர்ந்து, கரூர் மாவட்டம் நச்சலூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை, கலெக்டர் ஜெயந்தி திறந்து வைத்தார்.

### வெங்காயம் விலை குறைய வாய்ப்பில்லை

தேனி:தேனியில் வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ சின்னவெங்காயம் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உழவர்சந்தையில் முதல் தரமுள்ள சின்ன வெங்காயம் கிலோ 45 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.தேனி மாவட்டத்தில் அறுவடை சீசன் முடிந்து விட்டதால், சின்ன வெங்காயம் திண்டுக்கல், ஒட்டன்சத்திம் மார்க்கெட்டில் இருந்து தேனி சந்தைக்கு வருகிறது.

வெளிமார்க்கெட்டில் முதல் தரமான சின்ன வெங்காயம் கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேனி உழவர்சந்தையில் முதல் தரமான சின்ன வெங்காயம் கிலோ 45 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.பெல்லாரி வெளிமார்க்கெட்டில் கிலோ 45 ரூபாய்க்கும், உழவர்சந்தையில் 30

ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. விலை அதிகமாக இருந்தாலும், அறுவடை சீசன் தொடங்க இன்னும் ஒரு மாதம் வரை ஆகும். அதுவரை விலை குறைய வாய்ப்புகள் இல்லை என தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் சின்னராஜ் தெரிவித்தார்.

**விலை குறைவால் பருத்தியில் மறு சாகுபடியை விரும்பாத விவசாயிகள்**

தேனி:பருத்திக்கு விலை கிடைக்காததால் மறுசாகுபடி செய்யாமல் விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறிவருகின்றனர்.தேனி மாவட்டத்தில் பருத்தி பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்கின்றனர். கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் பருத்தி ரூ. ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் வரை விற்பனையானது. தற்போது பருத்திக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை. மிக குறைவாக ஒரு குவிண்டால் ரூ. 2500 க்கு கீழ் விற்றது. சில மாதங்களுக்கு முன் தான் குவிண்டால் ரூ.3600 சற்று உயர்ந்தது. இந்த விலையும் கட்டுபடியாகாது என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். தேனி அருகே ஊஞ்சாம்பட்டியை சேர்ந்த விவசாயி தங்கராஜா தனது 2.50 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்தார்.

பருத்தியில் எதிர்பார்த்த உற்பத்தி இருந்தது. மொத்தம் 44 குவிண்டால் சாகுபடி பெற்றார். ஆனால் விலை எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. சில விவசாயிகள் நல்ல விலை கிடைத்தால் "கட்டத்தழவு' முறையில் உரமிட்டு, மருந்து தெளித்து திரும்ப விவசாயம் செய்து 75 சதவீத மகசூல் பெறுவர். பருத்திக்கு உரிய விலை கிடைக்காததால் கட்டத்தழவு பருத்தி சாகுபடியை டிராக்டர் மூலம் அழித்துவருகின்றனர்.அவர் கூறியதாவது: இரண்டு ஆண்டுகளாக பருத்திக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. பருத்தி எடுக்கும் பெண்களுக்கு தின கூலி ரூ.150 கொடுக்கவேண்டும்.ஆனால் கூலிஆட்கள் 5 முதல் 6 கிலோ அளவிற்கு தான் எடுப்பர். தற்போது பருத்தி விற்கும் விலையில் எடுப்பு கூலி கூட மிஞ்சாது என்பதற்கான பருத்தி கட்டத்தளவு சாகுபடியை அழித்தேன், என்றார்.

## வெங்காய சாகுபடியில் ஒருங்கிணைந்தபயிர் பாதுகாப்பு முறை ஆலோசனை

தேனி:தேனி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் "நஞ்சு இல்லாத காய்கறி சாகுபடி' பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இதில் வெங்காய சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையாக நடவு வயலை சுற்றி இரு வரிசையில் மக்காச்சோளம் பயிரிட வேண்டும்.

தரமான பூச்சி நோய் தாக்குதல் இல்லாத விதை வெங்காயத்தை தேர்வு செய்யவேண்டும். விதை நேர்த்தியாக ஒரு கிலோ விதைக்கு சூடோனோனஸ் புளுரோசன்ஸ் 5 கிராம், டிரைகோடெர்மா விரிடி 5 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். நடவு வயலில் ஒரு எக்டேருக்கு சூடோமோனஸ் புளுரோசன்ஸ் 1.25 , டிரைகோடெர்மா விரிடி 1.25 கிலோ, வாம் 1.25 கிலோ, அசோஸ்பைரில்லம் 2 கிலோ, பாஸ்போபாக்டீரியா 2 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 250 கிலோ வீதம் கலந்து மண்ணில் இடவும். மஞ்சள் ஒட்டுப்பொறி எக்டேருக்கு 12 எண்கள் வீதம் வைத்து வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

இனக்கவர்ச்சி பொறி எக்டேருக்கு 12 வீதம் வைத்து புழுக்களின் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். சூடோமோனாஸ் புளுரோசன்ஸ் 5கிராமுடன் பிரிவேரியா பேசியானா 10 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து 30ம் நாள் தெளித்து தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம். பூச்சி நோய்களை கட்டுப்படுத்த அசாரடிராக்டின் மருந்தினை 2 மில்லி ஒரு லிட்டர் நீர் வீதம் கலந்து 40 ம் நாளில் தெளித்து கட்டுப்படுத்தலாம் என தோட்டக்கலை துறை துணை இயக்குனர் சுரேஷ்ஸ்ரீராம் தெரிவித்துள்ளார்.

## பருத்தியில் பூச்சி தாக்குதல்:பஞ்சு விலை பெரும் சரிவு

ஆர்.எஸ்.மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில்ஏராளமான ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நன்கு விளைந்த பருத்தி செடிகளில் இருந்து தரம் பிரித்து எடுக்கப்பட்ட பஞ்சுகள், ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் உள்ள கமிஷன் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் குவிண்டால் ரூ 4,500 வரை விற்பனையான பருத்தி பஞ்சு, நடப்பு ஆண்டில் குவிண்டால் ரூ.2,800 முதல் 3 ஆயிரம் வரை மட்டுமே விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.பருத்தி செடிகளில் பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதல் காரணமாக பஞ்சுகளின் தரம் குறைந்து விட்டதால், நடப்பாண்டில் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை;சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் ஜூன் 26 அன்று காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். இதில், விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்று அத்துறை சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம், என கலெக்டர் பி.ஏ.,(வேளாண்மை) சுதர்சன் தெரிவித்தார்.

தினமணி

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் இன்று வெளியீடு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 2015-2016ம் கல்வி ஆண்டுக்கான பி.எஸ்.சி.,(விவசாயம்) உள்ளிட்ட, 13வகையான பட்டப்படிப்புகளுக்கு,

29 ஆயிரத்து, 942 பேர் விண்ணப்பித்தனர். விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, இன்று காலை, 10 மணிக்கு பல்கலை துணைவேந்தர் ராமசாமி வேளாண் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடுகிறார். விண்ணப்பதாரர்கள், www.tnau.ac.in என்ற இணையதளத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

**குமரி மாவட்டத்தில் சாரல் மழை நீடிப்பு: அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 36 மி.மீ.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சாரல் மழை நீடித்து வருகிறது. அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 36 மி.மீ. மழை பதிவானது. கேரளாவில் தென் மேற்கு பருவமழை தொடங்கியதைத் தொடர்ந்து குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக சாரல் மழை நீடித்து வருகிறது. முள்ளங்கினாவிளை, புத்தன் அணை, இரணியல், கோழிப்போர்விளை, அடையாமடை, நாகர்கோவில், சுருளோடு, கொட்டாரம், மயிலாடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் கொட்டி தீர்த்து வரும் கனமழையினால் பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மழை நீடிப்பதால் மாவட்டம் முழுவதும் 448 குளங்கள் முழு கொள்ளளவை எட்டியுள்ளதாகவும், 562 குளங்கள் 75 சதவீதமும், 364 குளங்கள் 50 சதவீதமும், 666 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பியுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்வரத்து: பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி 40.05 அடியாக இருந்தது. அணைக்கு 326 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 168 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 73.22 அடியாக

உள்ளது. அணைக்கு 201 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 50 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

மழையளவு: மாவட்டம் முழுவதும் வியாழக்கிழமை இரவு தொடங்கி வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பேச்சிப்பாறை 31.2, பெருஞ்சாணி 19.8, சிற்றாறு1 22, சிற்றாறு2 22.4, நாகர்கோவில் 11.2, பூதப்பாண்டி 8.5, சுருளோடு 18.2, கன்னிமார் 9.4, ஆரல்வாய்மொழி 6, பாலமோர் 25.5, மயிலாடி 9.5, கொட்டாரம் 9.4, இரணியல் 3, முள்ளங்கினாவிளை 36, புத்தன் அணை 18.8, ஆனைக்கிடங்கு 11, குளச்சல் 12.6, குருந்தன்கோடு 6.4, அடையாமடை 8, கோழிப்போர்விளை 20.5 மி.மீட்டர் மழை பதிவாகியது.

**சில இடங்களில் இன்று மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வடக்கு ஆந்திர கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக ஆந்திர கடலோர பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதன் தாக்கமாக சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் சில பகுதிகளில் வானம் மேக மூட்டமாக இருப்பதோடு, சாரல் மழையும் பெய்து வருகிறது. அதேவேளையில், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெப்பச் சலனத்தின் காரணமாக சனிக்கிழமை மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தென்காசி, நடுவட்டம், வால்பாறையில் 40 மி.மீ., பேச்சிப்பாறை, சின்னக்கல்லாறு, சங்ககிரி, தேவலா, பொள்ளாச்சியில் 30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. பாபநாசம், சிதம்பரம், சீர்காழி, ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இடங்களில் 20 மி.மீ. மழையும், விருத்தாசலம், நன்னிலம், நாமக்கல், பெரியாறு, குளச்சல், பெரம்பலூர்,

சேலம், நாகப்பட்டினம், நாகர்கோவில், குழித்துறை, ஏற்காடு, கன்னியாகுமரி, திருவாரூர் உள்ளிட்ட இடங்களில் 10 மி.மீ. மழையும் பெய்துள்ளது

**விளைச்சல்: ஆய்வு நடத்த ஆட்சியர் உத்தரவு**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த பருவத்தின் மொத்த விளைச்சல் குறித்து வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுடன் இணைந்து ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆட்சியர் வே.க.சண்முகம் உத்தரவிட்டார்.காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் சீத்தாராமன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம்:தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலாளர் நேரு, விவசாயிகள் திருவேங்கடம், முரளிமோகன், ஏழுமலை ஆகியோர் பேசுகையில், காஞ்சிபுரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க பலமுறை கோரிக்கை விடுத்தும் மாவட்ட நிர்வாகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விவகாரத்தில் வேளாண் துறை அதிகாரிகள் உரிய ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றனர்.

இதற்குப் பதிலளித்த வேளாண் இணை இயக்குநர் சீத்தாராமன், மாவட்டத்தில் கடந்த பருவத்தில் 55 ஆயிரம் ஹெக்டேரில் பயிர்கள் விளைவிக்கப்பட்டுள்ளன என்றார்.அப்போது குறுக்கிட்டு விவசாயிகள் பேசியதாவது:இதே அதிகாரி, மாவட்டத்தில் 85 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் நடைபெற்றதாக கடந்த மாதம் நடைபெற்ற கூட்டம் வரை கூறி வந்தார். தற்போது 55 ஆயிரம் ஹெக்டேர் என்று கூறுகிறார். இதில் இருந்தே முறையாக கணக்கெடுப்பு நடத்தவில்லை என்பது தெளிவாகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த காலங்களில் 4.50

லட்சம் ஹெக்டேர் விளை நிலங்கள் இருந்தன. அவை தற்போது 1.85 லட்சம் ஹெக்டேராக குறைந்து விட்டன. இதனால், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட பல மடங்கு விவசாயம் குறைந்துள்ளது.விளைவிக்கப்பட்ட ஏராளமான நிலங்கள் போதிய தண்ணீர் இன்றி காய்ந்து விட்டன. எனவே, முறையான கணக்கெடுப்பு நடத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.இதற்குப் பதிலளித்து ஆட்சியர் பேசியதாவது:ஒவ்வொரு வட்டம் வாரியாக வேளாண் அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு நடத்த வேண்டும். அவ்வாறு ஆய்வு நடத்தும்போது, விவசாயிகள் கொண்ட ஒரு குழுவையும் இணைத்து நடத்த வேண்டும். இதன் உண்மைத் தன்மை குறித்து வேளாண் அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் அறிக்கை தமிழக அரசிடம் ஒப்படைக்கப்படும்.அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வழி ஏற்படுத்தலாம் என்றார்.தொடர்ந்து பேசிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலாளர் நேரு, அரசு நேரடி நெல் கொள்முதல் மையங்கள் மூலம் கொள்முதல் செய்த வகையில், பல கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றதாக கடந்த மாதம் தெரிவித்தோம். இதுகுறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார்.விவசாயி மணி பேசுகையில், பாலாற்றில் தடுப்பணை கட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. தற்போது பாலூர் பகுதியில் தடுப்பணை கட்டப்படுகிறது.இது விவசாயிகளுக்கு எந்த வகையிலும் பயன்படாது. அது முழுக்க முழுக்க ரயில் நீர் திட்டத்துக்காக போடப்பட்ட திட்டமாகும். எனவே, விவசாயிகள் பயன்பெறும் வகையில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.இதற்கு ஆட்சியர் அளித்த பதிலில், விவசாயிகள் தரும் புகார் மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து, அது தொடர்பான விவரத்தை அதிகாரிகள்

விவசாயிகளுக்கு அனுப்ப வேண்டும் என்றார். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## சிறு தானியங்களை அதிகளவில் பயிரிட வேண்டும்

திருவள்ளூர் மாவட்டத்தில் செம்மைநெல் சாகுபடியை அதிகம் மேற்கொள்வதுடன், சிறு தானியங்களை அதிக அளவில் பயிரிட வேண்டும் என வியாழக்கிழமை மாலை நடைபெற்ற திட்டக் குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் கேட்டுக் கொண்டார்.திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கத்தில் மாவட்ட திட்டக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் பா.ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் முன்னிலை வகித்தார்.

இதில், கல்வித் துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, போக்குவரத்துத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண்மை விற்பனை, வணிகத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின் வாரியம், மாநில சமச்சீர் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளில் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மேலும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் மாவட்ட ஆட்சியர் விரிவாக ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பேசியது: இந்த மாவட்டத்தில் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடை, கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.சென்ற ஆண்டைவிடவும், முதன் முறையாகவும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 90 சதவீதத்துக்கு அதிகமாக தேர்ச்சி விகிதத்தை திருவள்ளூர் மாவட்டம் பெற்றுள்ளது.

அத்துடன் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற்றவர்களில் அதிகமான மாணவர்கள் இந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியின் விகிதத்தை முழுமையான அளவு எட்டும் வகையில் பயிரிட விவசாயிகளை வேளாண் அதிகாரிகள் ஊக்குவிக்க வேண்டும். மேலும், கம்பு, கேழ்வரகு, தினை உள்ளிட்ட சிறு தானியங்களையும் அதிக அளவில் பயிரிட விவசாயிகளின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். காய்கறிகளை அதிகமாக பயிரிட வேண்டும்.வேளாண்மைத் துறையினர், அரசு மானியத்தில் வழங்கப்படும் சோலார் மோட்டார்களை விவசாயிகளுக்கு வழங்கிடவும், உரங்கள் தட்டுப்பாடு இன்றி கிடைக்கவும் வழிவகை செய்ய வேண்டும்.திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து போக்குவரத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தமிழக முதல்வர் அறிவித்து நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களிடம் சென்றடையும் வகையில் அனைத்து துறை அதிகாரிகளும் செயல்பட வேண்டும் என்றார்.இந்தக் கூட்டத்தில், மாவட்ட ஊராட்சிச் செயலர் மைதிலி, துணை ஆட்சியர் (பயிற்சி) ராஜசேகர், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்கள், அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## கோடை அறுவடை: முதல் முறையாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

கோடை அறுவடைக்காக உசிலம்பட்டி பகுதியில் முதல்முறையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் கடந்த நெல் அறுவடை பருவத்தில் மாவட்டம் முழுவதும் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இதன் மூலம் மொத்தம் 30 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. தாமதமான மழை காரணமாக

உசிலம்பட்டி வட்டாரத்தில் நெல் சாகுபடி சற்று தள்ளிப்போனது. இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோடை பருவத்தில் தான் அறுவடை செய்தனர். இதற்கிடையே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டன. இதனால் இப்பகுதி விவசாயிகள், நெல் வியாபாரிகளுக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், மிகக் குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்ய முன்வந்ததால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் முறையிட்டனர். அதையடுத்து, வாலாந்தூர், செல்லம்பட்டி, நாட்டார்மங்கலம், சொக்கதேவன்பட்டி, வெண்ணங்குடி, கொடிக்குளம், நாட்டார்பட்டி உள்ளிட்ட இடங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களைத் திறக்க ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. கோடை அறுவடை பருவத்துக்கு நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு பணம் வழங்குவதில் வரும் புகார்களைத் தவிர்க்க நேரடியாக அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்று ஆட்சியர் தெரிவித்தார்.

## ஜூன் 26-இல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் ஜூன் 26-ஆம் தேதி காலை 11 மணி அளவில் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் காலை 11 முதல் 11.30 மணி வரை மனுக்கள் கொடுக்கலாம். 11.30 முதல் 12.30 மணி வரை விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்னைகள்

குறித்து கருத்துகள் தெரிவிக்கலாம். 12.30 முதல் 1.30 வரை அதிகாரிகள் தங்களின் விளக்கங்களைத் தெரிவிப்பார்கள்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம்**

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வேளாண்துறை சார்பில் விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, ஈரோடு வேளாண்துறை வணிகப் பிரிவு துணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். ஈரோடு வேளாண்துறை வணிக அலுவலர் பூர்ணிமா முன்னிலை வகித்தார். மொடக்குறிச்சி உதவி வேளாண் அலுவலர் சுரேந்தர் வரவேற்றார். அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூட மேற்பார்வையாளர் பழனிசாமி நன்றி கூறினார்.கூட்டத்தில் எழுமாத்தூர், அவல்பூந்துறை, மொடக்குறிச்சி பகுதிகளைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் வங்கிக் கடன் வழங்கும் விழா**

கோத்தகிரி கெட்டிக்கம்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வங்கிக் கடன் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு வங்கித் தலைவர் பி.எச்.சிவாஜி தலைமை வகித்தார். துணைத் தலைவர் நஞ்சு, விவசாயிகள் அணி ஒன்றியச் செயலர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, மகளிர் குழுக்களுக்கு ரூ.4.5 லட்சம் வங்கிக் கடன் வழங்கினர். நிகழ்ச்சியில் நிர்வாகிகள் தேவன், சென்னன், திலீப்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**கோழிப் பண்ணையாளர்களுக்கு குடிநீரில் கிருமி ஆய்வு செய்ய அறிவுறுத்தல்**

குடிநீரில் ஈகோலை கிருமியின் அளவை ஆய்வகத்தில் ஆய்வு செய்து, அதற்கேற்றாற்போல் கிருமி நாசினி மருந்தை உபயோகப்படுத்த வேண்டும் என கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் அவ்வப்போது மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை இருக்கும். தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் பரவலாகவே காணப்படுகிறது. ஆகையால், மேகமூட்டம் மற்றும் சிறு மழைக்கு வாய்ப்புள்ளது.இதனால், கோழிகளில் தீவன எடுப்பு இயல்பான அளவில் நிலவும். முட்டை உற்பத்தியும் இயல்பாக இருக்க வாய்ப்புள்ளது. ஆகவே, புரதத்தின் அளவையும், எரிசக்தியின் அளவையும் இயல்பான அளவுக்கே கொடுக்கலாம். மேலும், சூரியகாந்தி பிண்ணாக்கின் தரம் பரிசோதித்து அறிந்த பின்னரே பயன்படுத்த வேண்டும்.கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும், மேல் மூச்சுக் குழாய் மற்றும் ஈகோலை கிருமியினால் ஏற்படும் நோய்களினால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது.ஆகவே, பண்ணையாளர்கள் கோழிக்கொட்டகை மற்றும் குடிநீரில் ஈகோலை கிருமியின் அளவை ஆய்வகத்தில் ஆய்வு செய்து, அதற்கேற்றாற்போல் கிருமி நாசினி மருந்தை உபயோகப்படுத்த வேண்டும்.

**"விவசாயிகளுக்கு ரூ. 99 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு'**

அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு 2015-16 ஆம் ஆண்டுக்கு ரூ. 99 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.அரியலூர் மாவட்ட ஆட்சியர்

அலுவலகக் கூட்ட அரங்கில் கூட்டுறவுத்துறை சார்பில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயலாளர்கள், கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு வியாழக்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் 2015-16 ஆம் ஆண்டுக்கு அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 99 கடன் பயிர்க் கடன் வழங்கிட அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் இதுவரை ரூ. 9 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஜூன் மாதத்துக்குள் பயிர்க் கடன்களை விவசாயிகளுக்கு வழங்கிட சம்பந்தப்பட்ட அலுவலர்கள், சங்கங்களின் செயலாளர்கள் பணி மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவு கடன் சங்கங்களில் தேவையான அளவுக்கு யூரியா உரம் இருப்பு வைத்திருக்க வேண்டும். அரசின் சிறப்புத் திட்டங்களின் அனைத்து சான்றிதழ்கள், பணிகள் உ-எர்ஸ்ங்ழ்ய்ஹய்ஸ்ரீங் கணினி வாயிலாக பொதுமக்களுக்கு கிடைத்திடவும் அலுவலர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும் என்றார்.

இதில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் பாபு, துணைப் பதிவாளர் சந்திரசேகரன், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர் செல்வராஜ் மற்றும் சங்கங்களின் செயலாளர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற யோசனை

புதுக்கோட்டை மாவட்டத்தில் மானாவாரி நிலக்கடலைச் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ஆர். சதானந்தம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற நிலக்கடலை விதைப் பருப்புகளை டிரைக்கோடர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூஞ்சனக்கொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் அல்லது

சூடோமோனாஸ் புளோரசன்ஸ் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் விதைப்புக்கு சற்று முன் கலந்து விதைக்கவேண்டும்.

ரைசோபியம் உயிர் உரத்தை ஏக்கருக்கு ஒரு பாக்கெட் வீதம் அரிசி வடிகஞ்சியுடன் கூழ்போல் கலக்கி அதில் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைப் பருப்புகளை நன்கு கலந்து நிழலில் உலர்ந்த பின் வயலில் விதைக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்வதால் வேர் அழுகல் மற்றும் வாடல் நோய் தடுக்கப்பட்டு விதை முளைப்புத் திறனும் அதிகரிக்கும்.பயிர் இடைவெளி வரிசைக்கு வரிசை 30 செ.மீ., இடைவெளியும், செடிக்குசெடி 10 செ.மீ., இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். பயிர் எண்ணிக்கையை சரியான முறையில் பராமரித்தால்தான் கூடுதல் மகசூல் பெற முடியும்.

விதைப்பு முடிந்தவுடன் ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்சத்தை 15 கிலோ மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண்டும். இதனை அடியுரமாக இடக்கூடாது. நிலக்கடலைக்கு நுண்சத்து இடுவதால் நிலக்கடலை திரட்சியாகவும், பொக்கற்றதாகவும் இருக்கும்.

நிலக்கடலை ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஏக்கருக்கு தலா 4 பாக்கெட்டுகள் வீதம் 10 கிலோ தொழுஉரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து வயலில் இடவும்.

இதனால் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு அளிக்கும். அதன் மூலம் 25 சதவீதம் தழைச்சத்து இடுவதை குறைத்துக் கொள்ளலாம்.ஊடுபயிர் மானாவாரி நிலக்கடலையில் பூச்சி, நோய்களின் தாக்குதலை குறைக்க ஊடுபயிர் சாகுபடி செய்வது அவசியம். ஊடுபயிராக துவரை, உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயிர்களை 4:1 என்ற விகிதத்தில் அதாவது 4 வரிசை நிலக்கடலைக்கு ஒரு வரிசை ஊடுபயிர் என்ற வீதத்தில் விதைக்கவும். மேற்கண்டவாறு மானாவாரி

நிலக்கடலை விதைப்புச் செய்து விவசாயிகள் கூடுதல் மகசூலும், லாபமும் பெறலாம்.

**ரப்பர் விவசாயத்துக்கு மானியத்தை தொடர்ந்து வழங்கக் கோரிக்கை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விவசாயத்துக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை தொடர்ந்து வழங்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

நாகர்கோவிலில் மாவட்டச் செயற்குழு மற்றும் வட்டாரச் செயலர்களின் கூட்டுக்கூட்டம் ஹெச். ராஜதாஸ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் என். முருகேசன் முன்னிலை வகித்தார்.

மத்தியில் பாஜக அரசு பொறுப்பேற்றது முதல் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. விவசாயிகளின் நிலங்களை வலுக்கட்டாயமாகப் பறிக்கும் நோக்கத்தில் மூன்றாவது முறையாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடெங்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காங்கிரஸ் அரசும், தற்போதைய பாஜக அரசும் கையாண்ட - கையாளுகிற விவசாயக் கொள்கை காரணமாக ரப்பர் விலை வீழ்ச்சி ஏற்பட்டு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்நிலையில் ஒரு ஹெக்டேர் பூமியில் ரப்பர் பயிரிட வழங்கி வந்த ரூ. 25 ஆயிரம் மானியத் தொகையை மத்திய அரசு முடக்கவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. தற்போதைய மானியத் தொகையை மேலும் உயர்த்த வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி வரும் நிலையில், ஏற்கெனவே வழங்கி வந்த மானியத்தை முடக்க மத்திய பாஜக அரசு முடிவு செய்துள்ளது ரப்பர் விலை வீழ்ச்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை உருவாகும்.

மத்திய அரசின் ரப்பர் விவசாயிகளுக்கெதிரானச் செயலை மார்க்சிஸ்ட் கட்சி கண்டிப்பதுடன் ஏற்கனவே வழங்கி வந்த ரப்பர் விவசாய மானியத்

தொகையை முடக்காமல் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**குமரி மாவட்டத்தில் சாரல் மழை நீடிப்பு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சாரல் மழை நீடித்து வருகிறது. முள்ளங்கினாவிளையில் அதிகபட்சமாக 36 மி.மீ. மழை பதிவானது.முள்ளங்கினாவிளை, புத்தன் அணை, இரணியல், கோழிப்போர்விளை, அடையாமடை, நாகர்கோவில், சுருளோடு, கொட்டாரம், மயிலாடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் பெய்யும் பலத்த மழையால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மழை நீடிப்பதால் மாவட்டம் முழுவதும் 448 குளங்கள் முழு கொள்ளளவை எட்டியுள்ளதாகவும், 562 குளங்கள் 75 சதவீதமும், 364 குளங்கள் 50 சதவீதமும், 666 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பியுள்ளதாகவும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்வரத்து: பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி 40.05 அடியாக இருந்தது. அணைக்கு 326 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 168 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 73.22 அடியாக உள்ளது. அணைக்கு 201 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 50 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

மழையளவு: மாவட்டம் முழுவதும் வியாழக்கிழமை இரவு தொடங்கி வெள்ளிக்கிழமை காலை 8 மணிவரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பேச்சிப்பாறை 31.2, பெருஞ்சாணி 19.8, சிற்றாறு1- 22, சிற்றாறு 2 -22.4, நாகர்கோவில் 11.2, பூதப்பாண்டி 8.5, சுருளோடு 18.2, கன்னிமார் 9.4, ஆரல்வாய்மொழி 6, பாலமோர் 25.5, மயிலாடி 9.5, கொட்டாரம் 9.4,

இரணியல் 3, முள்ளங்கினாவிளை 36, புத்தன் அணை 18.8, ஆனைக்கிடங்கு 11, குளச்சல் 12.6, குருந்தன்கோடு 6.4, அடையாமடை 8, கோழிப்போர்விளை 20.5 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளத் தொழில்நுட்பங்களை கண்டறிதல் அவசியம்**

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளம் சார்ந்த தொழில்நுட்பங்களை மீன்வளப் பல்கலைக்கழகம் கண்டறிய வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுவிஜய நாள் விழாவில் அவர் மேலும் பேசியதாவது: மீன்வளப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதன் நோக்கமும், பயன்பாடும் மக்களுக்கு சென்றடைய வேண்டும். தூத்துக்குடி மாவட்டம் நீண்ட கடற்கரையைப் பெற்று மிகுந்த மீன் வளத்துடன் காணப்படுவதால், மீன்வளம் சார்ந்த தொழில்நுட்பங்களை மீன்வளப் பல்கலைக்கழகம் கண்டறிய வேண்டும். அவை சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான பட்டப்படிப்பு பாடங்களை மீன்வளக் கல்வியில் புகுத்த வேண்டும்.மீன் உணவின் முக்கியத்துவத்தை மக்கள் உணர வேண்டும். மீன்வளமும், அதற்கான சமுதாய தேவைகளும் அதிகரிக்கப்படுவது தற்போதைய சூழ்நிலையாக இருப்பதால் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது மீன் சந்தைப்படுத்துதலையும், உள்நாட்டு மீன் விற்பனை போன்ற துறைகளில் பல ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பாஸ்கரன் மணிமாறன் பேசியதாவது:

தமிழக அரசு மீன்வளத்துக்காக அதிக நிதியுதவிகளை வழங்கி வருவது மீன்வளத்திற்கும், அதன் மேம்பாட்டிற்கும் முக்கிய வழிவகையாகும். இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட 2012இல் இருந்து 2015 வரை

பொன்னேரியிலும், நாகப்பட்டினத்திலும் 2 புதிய கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசு, அரசு சாரா துறைகளில் மீன்வளப் பட்டதாரிகள் ஈடுபட்டு மீன்வள மேம்பாட்டிற்காக உழைக்கின்றனர் என்றார் அவர்.நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ராமகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் கோ. சுகுமார், மீன்வள விரிவாக்கத்துறை தலைவர் சாந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பொதுவிஜய நாளையொட்டி கல்லூரியிலுள்ள அருங்காட்சியகம், நூலகம், திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகம், கணினி மீன்வளக் கல்விக்கூடம், மீன் பண்ணைகள், அலங்கார மீன்களின் காட்சியமைப்பு, மீன் தீவனத் தயாரிப்பு இயந்திரக்கூடம், மீன்வள உயிரியல் ஆய்வுக்கூடம், கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்புக் கண்காட்சி, ஒலி-ஒளிக்கூடம், நோய் கண்டறிதல் மற்றும் மேலாண்மை ஆய்வுக்கூடம், மீன் தரக்கட்டுப்பாடு ஆய்வகம், மீன்பதப்படுத்துதல் ஆய்வுக்கூடம், மீன்பிடி இயந்திர தொழில்பட்டறை, மீன்வளச் சுற்றுச்சூழலியல் ஆய்வுக்கூடம், மீன்வள உயிரியல் தொழில்நுட்ப ஆய்வகம், மீன்வளப் பொருளியல் கூடம் ஆகியவற்றை பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவிகள் என ஏராளமானோர் பார்வையிட்டனர்.

## கோடையை குளிர்வித்த மழை

விழுப்புரத்தில் பெய்த திடீர் மழையால் வெப்பம் தணிந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை முதலே வெயிலின் தாக்கம் குறைவாக இருந்தது. இந்நிலையில் மாலையில் திடீரென சாரல் மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. இது மாவட்டம் முழுவதும் பரவலாக காணப்பட்டது.

விழுப்புரத்தில் கடந்த சில நாள்களாகவே வெயிலின் தாக்கம் சற்று குறைந்தே காணப்பட்டது. கடந்த இரு நாள்களாக மேக மூட்டமாகவே இருந்தது. இதனால் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்த்த நிலையில்

வெள்ளிக்கிழமை சாரல் மழை சிறிது நேரம் பெய்தது. இந்த மழையால் குளிர்ந்த சூழ்நிலை ஏற்பட்டது.தற்போது பெய்த மழையால் வறண்ட பூமி குளிர்ந்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பயிர் சாகுபடியில் உயிர் உரங்களுக்கு முக்கியத்துவம் வேளாண்மை இயக்குநர் தகவல்**

விவசாயத்தில் உயிர் உரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக வேளாண் இயக்குநர் டாக்டர்.ராஜேந்திரன் தெரிவித்தார்.உயிர் உரங்கள்மதுரை சொக்கிகுளத்தில் இயங்கும் வாப் நிறுவனத்தில் இடு பொருள் விற்பனையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் தமிழக அரசின் வேளாண் இயக்குநர் ராஜேந்திரன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது,உர வியாபாரிகளுக்கு வாப்ஸ் மற்றும் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் ஆகியவை இணைந்து வழங்கும் இடு பொருள் விற்பனை குறித்த பயிற்சி சிறப்பான ஒன்றாகும். இந்த பயிற்சியின் மூலம் இடு பொருள் விற்பனையாளர்கள் விவசாயம் மற்றும் இடுபொருள்கள் தொடர்பான மேம்பட்ட அறிவை பெற முடிகிறது. தமிழக அரசு தற்போது விவசாயத்தில் உயிர் உரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்துள்ளது. எனவே, உர வியபாரிகள் உயிர் உரங்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல உதவ வேண்டும். உயிர் உரங்களை பயன்படுத்துவதால் எதிர்காலத்தில் விவசாயம் செழிக்கும். கடந்த நான்கு ஆண்டுகளில் நமது மாநிலத்தின் வேளாண் உற்பத்தி முந்தைய காலங்களை விட ஏறுமுகத்தில் உள்ளது.கடந்த ஆண்டு 110 மெட்ரிக் டன்னாக இருந்த வேளாண் உற்பத்தி இந்த ஆண்டு 128

மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இது தமிழக வேளாண் துறையின் சாதனைகளில் ஒன்றாகும். இந்த சாதனை மேலும் தொடர விவசாயிகள் உயிர் உரங்களை பயன்படுத்த இடுபொருள் விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு பாலமாக இருந்து செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

சான்றிதழ்: நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இடுபொருள் விற்பனை குறித்த பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மானியங்கள் வழங்கப்பட்டது. விழாவில், மெர்கன்டைல் வங்கி இயக்குநர் டாக்டர்.பெரிஸ் மகேந்திர வேல், தேனி விவசாய தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் டாக்டர்.சிவசுப்ரமணியம், வேளாண் இணை இயக்குர் சாரநாத் பாபு, வாப்ஸ் செயலாளர் அருள், தலைமை செயல் அலுவலர் சோமேஸ் பாபு, ஒருங்கிணைப்பாளர் பெரியசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் சீதோஷ்ண நிலை மாற்றம்: தேயிலை செடிகளை இலை பேன் தாக்கும் அபாயம் உபாசி ஆராய்ச்சி மைய மண்டல உதவி இயக்குனர் தகவல்

நீலகிரியில் சீதோஷ்ண நிலை மாற்றத்தின் காரணமாக தேயிலை செடிகளை இலை பேன் தாக்கும் அபாயம் இருப்பதாக உபாசி ஆராய்ச்சி மைய மண்டல உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு எச்சரிக்கை விடுத்து உள்ளார்.60 ஆயிரம் சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார நிலையை தேயிலை விலையே நிர்ணயம் செய்து வருகிறது. குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த மே மாதம் பெய்த தொடர் மழையின் காரணமாக தற்போது

தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளது.இந்த நிலையில் தற்போது சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதால் தேயிலை செடிகளை அசுவினி என்ற இலை பேன் தாக்கும் அபாயம் உள்ளதாக உபாசி ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது. இதுகுறித்து உபாசி ஆராய்ச்சி மைய மண்டல உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு கூறியதாவது:–இலை பேன் தாக்கும் அபாயம்தென்மேற்கு பருவமழை கேரளாவில் பெய்யும் பொழுது கேரள எல்லையையொட்டியுள்ள பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. குன்னூர் பகுதி அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவ மழையையே நம்பி உள்ளது. இருப்பினும் தற்போது சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதால் பலத்த காற்று வீசி வருகிறது. இதன் காரணமாக இந்த மாதத்தில் ஓரளவு மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் சீதோஷ்ண நிலை மாற்றத்தின் காரணமாக தேயிலை செடிகளை அசுவினி என்கிற இலை பேன் தாக்கும் அபாயம் உள்ளது.நீலகிரி மாவட்டத்தில் ரசாயன பூச்சி கொல்லி மருந்து தெளிக்க கூடாது என்ற விதிமுறை உள்ளது. எனவே இந்த பூச்சியை ஆரம்ப கால கட்டத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும். இதனை கட்டுப்படுத்த பூஞ்சாணத்தை விவசாயிகள் பயன்படுத்தலாம். மேலும், இதுகுறித்த விவரத்தை தேயிலை விவசாயிகள் உபாசி ஆராய்ச்சி மையத்தை அணுகி தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைக்க 29 விவசாயிகளுக்கு தலா ரூ.3¾ லட்சம் மானியம்



சேலம் மாவட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டு அமைக்க 29 விவசாயிகளுக்கு தலா ரூ.3¾ லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் குழு ஆய்வு

சேலம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் செயல்பட்டு வரும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் நீர்வள, நிலவள திட்டம், சூரிய சக்தி பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்கள் குறித்து அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாவட்டம் ஏ.கொமாரபாளையம் கிராமத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எண்ணெய்பனை பரப்பு விரிவாக்கத்தில் 4 ஹெக்டர் பரப்பளவில் ரூ.76,600 மானியத்தில் பயிர் செய்யப்பட்ட எண்ணெய்பனை தோட்டத்தினையும், எடையப்பட்டியில் வளை சட்ட மண்மாதிரி எடுக்கும் பணியினையும், மலையாளப்பட்டியில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் பெத்தநாயக்கன்பாளையம் சாமை சாகுபடி விவசாய குழுவிற்கு ரூ.2,04,300 மானியத்துடன் வழங்கப்பட்ட சிறுதானிய மற்றும் கல், உமி நீக்கும் இயந்திரத்தினையும், சின்னக்கல்வராயன்மலை வடக்கு (கருமந்துறை) பகுதியில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2.65 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எண்ணெய்பனை பரப்பினையும், அதே பகுதியில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நீடித்த நவீன கரும்பு சாகுபடியினையும் ஆய்வு செய்யப்பட்டது.

**29 விவசாயிகளுக்கு மானியம்**

முதல்-அமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் அறிவித்துள்ள திட்டத்தின்படி, பகுடுபட்டு பகுதியில் 29 விவசாயிகளுக்கு தலா ரூ.3 லட்சத்து 84 ஆயிரம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி பம்புசெட்டுகள் குறித்தும் பெத்தநாயக்கன்பாளையம் வேளாண்மை

உதவி இயக்குனர் விநாயகமூர்த்தி விளக்கி கூறினார். மேலும் வேளாண்மைத்துறை சார்பில் செயல்பட்டு வரும் நீர்வள நிலவளத்திட்டம், வலைச்சட்ட முறையில் மண் மாதிரி சேகரம் செய்து மண்வள அட்டை வழங்குதல், எண்ணெய்பனை பரப்பு விரிவாக்கம் , சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள், நீடித்த நவீன கரும்பு சாகுபடி ஆகிய திட்டங்கள் குறித்து மாவட்ட கலெக்டர்மகரபூஷணம் கூறியதாவது:-சுத்திகரிப்பு எந்திரம் மேல் வெள்ளார் உப வடிநிலப்பகுதியில் 2014-15ம் ஆண்டு பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் சாமை சாகுபடியாளர் குழுவிற்கு சிறுதானியங்கள் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் கல் நீக்குதல் தரம் பிரித்தல் மற்றும் உமி நீக்குதல் ஆகியவற்றிற்காக குழுவிற்கு 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. மானியத் தொகை ரூ.2,04,300. சேலம் மாவட்டத்திற்கு மொத்தமாக 6 இயந்திரங்கள் ரூ.12 லட்சத்து 25 ஆயிரம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்திட 29 எண்ணிக்கை இலக்காக பெறப்பட்டு முழுமையாக சாதனை அடையப்பட்டது. இத்திட்டத்தில் 5 குதிரை திறன் கொண்ட ஏ.சி. பம்பு செட்டுகள் வழங்கப்பட்டது. மொத்த விலையான ஒரு பம்பு செட்டிற்கு ரூ.5,01,512-ல் அரசு மானியமாக தலா ரூ.3,84,000/- வழங்கப்பட்டது. பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் 5 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவிட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உத்தமபாளையம் பகுதியில் பாசிபயறு அறுவடை செய்யும் பணி தீவிரம்



உத்தமபாளையம் பகுதியில் பாசிபயறு அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

## கோடை விவசாயம்

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இருபோக நெல் சாகுபடி முடிந்தவுடன் வயல்களை நன்றாக உழுது கோடை விவசாயமாக பாசிபயறு, உளுந்து, சனம்பு கீரை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வது வழக்கம். முன்னதாக கம்பம், கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இரு போக நெல் அறுவடை பணி நடைபெற்றது. இதனால் தற்போது பெரும்பாலான விவசாயிகள் கோடை விவசாயமாக பாசிபயறு, உளுந்து உள்ளிட்ட பயிர்களை அறுவடை செய்து விட்டனர்.அதே நேரத்தில் உத்தமபாளையம், சின்னமனூர், குச்சனூர், உப்புகோட்டை, வீரபாண்டி, கோட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் இருபோக நெல் அறுவடை பணி தாமதமாக நடைபெற்றது. இதனால் இந்த பகுதிகளில் நெல் அறுவடைக்கு பின்பு கோடை விவசாயம் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. சில விவசாயிகள் கோடை விவசாயம் செய்து இருந்தனர். தற்போது உத்தமபாளையம் பகுதியில் பாசிபயறு அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.ஆர்வம் குறைவு

இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி சலீம் என்பவரிடம் கேட்ட போது, கோடை விவசாயம் செய்ய விவசாயிகளிடம் ஆர்வம் குறைவதற்கு காரணம் எந்த பயிர்கள் ஏதுவானது என்று வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தவில்லை. அதே நேரத்தில் விவசாயத்திற்கு ஏற்ற அளவு மழை பெய்யுமா? என்று சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் கோடை விவசாயம் செய்ய விவசாயிகள் மத்தியில் ஆர்வம் குறைந்து விட்டது என்றார்.

## வெண்டைக்காய் அறுவடை பணிகளில் விவசாயிகள் மும்முரம்



கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி பகுதியில் வெண்டைக்காய் அறுவடை பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

விவசாயம்: கள்ளக்குறிச்சி பகுதிகளான இந்திலி, மலைக்கோட்டாலம், ரோடுமாமாந்தூர், ரங்கநாதபுரம், குதிரைச்சந்தல், காரனூர், தென்கீரனூர், தச்சூர் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் மக்காச்சோளம், எள், கரும்பு, நெல், மஞ்சள் ஆகியவற்றை அதிகளவில் பயிரிட்டு வந்தனர். இந்தநிலையில் நெல், கரும்பு பயிரிடுவதை தவிர்த்து வெண்டை பயிரிடுவதில் சமீபகாலமாக விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். இதற்கு முக்கிய காரணம் வெண்டை பயிரிட்ட 40 நாட்களில் பலன் அளிக்க கூடிய ஒன்றாக உள்ளது. மேலும் தினசரி வருவாய் ஈட்டக்கூடிய ஒன்றாக வெண்டைக்காய் உள்ளது. இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் கரும்பு அதிக அளவில் பயிரிட்டு வந்தனர். ஆனால் தற்போது சர்க்கரை

ஆலைகள் அதிக அளவில் விவசாயிகளுக்கு நிலுவை தொகை தரவேண்டியுள்ளது.தினசரி வருவாய்எனவே கரும்பு விவசாயம் என்பது கசப்பான ஒன்றாக விவசாயிகளுக்கு மாறி உள்ளது. வெண்டை பயிரை பொறுத்தவரையில் விதை விதைத்த நாளில் இருந்து 5 நாட்களில் செடி முளைக்க தொடங்கிவிடும். 30 நாட்களில் பூ பூத்து, 40 நாட்களில் காய் காய்த்து அறுவடைக்கு தயாராகி விடும். பின்னர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் காய் பறிக்க தொடங்கி விடலாம். இதனால் விவசாயிகளுக்கு தினசரி வருவாய் ஈட்டி தரக்கூடிய ஒன்றாக வெண்டை உள்ளது. கடந்த மாத தொடக்கத்தில் வெண்டை பயிரிட்டோம். அவை தற்போது நன்கு வளர்ந்து காய்காய்க்க தொடங்கியுள்ளது. இதையடுத்து அறுவடை பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சந்தையில் 1 கிலோ வெண்டை ரூ.12 வரை விற்பனையாகிறது. செலவு போக ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை வெண்டை பயிரிட்டால் லாபம் கிடைக்கிறது என்றார்.

தினகரன்

**குஜராத்தில் இருந்து கேரளா வரை 2 நாட்களுக்கு கனமழை தொடரும்**

புதுடெல்லி: குஜராத்தின் தெற்கு பகுதியில் இருந்து கேரள மாநிலம் வரைக்கும் 2 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.தென்மேற்கு பருவமழை இன்னும் தனது தீவிரத்தை காட்டவில்லை. இதற்கிடையே, கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மும்பையில் கனமழை பெய்துள்ளது. இந்நிலையில், குஜராத்தின் தெற்கு பிராந்தியத்தில் இருந்து, கேரள மாநிலம் வரைக்கும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதன் மூலம், தெலங்கானா, கோவா, மும்பை,

கடலோர ஆந்திர, கர்நாடகாவின் தெற்கு பகுதி உள்ளிட்ட இடங்களில், பரவலான மழைக்கு வாய்ப்பு உள்ளது. இதேபோன்று, ஒடிசா, மகாராஷ்ரத்தின் விதர்பா மற்றும் சட்டீஸ்கரின் சில பகுதிகளிலும், கனமழை பெய்யக்கூடும். நாடு முழுவதும், சராசரியை காட்டிலும் 10 சதவீதத்துக்கு அதிமாக மழை பதிவாகி உள்ளது.

**யூரியா இறக்குமதி 33 % குறைந்தது**

புதுடெல்லி: நாட்டின் யூரியா உரத்தின் இறக்குமதி கடந்த ஏப்ரல்-மே மாதங்களில் 33 சதவீதம் வீழ்ச்சியடைந்து 10.03 லட்சம் டன்னாக குறைந்துள்ளது என்று மத்திய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2014-ம் ஆண்டின் ஏப்ரல்-மே மாதங்களில் யூரியா இறக்குமதி 14.90 லட்சம் டன்னாக இருந்தது. உள்நாட்டில் ஓர் ஆண்டுக்கு 300 லட்சம் டன் அளவில் யூரியா தேவையுள்ளது. ஆனால், 220 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு, எஞ்சியவை இறக்குமதி செய்யப்படுகிறது. கடந்த 2014ம் ஆண்டில் யூரியா இறக்குமதி முந்தைய ஆண்டைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகரித்து, 87.49 லட்சம் டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.15 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று (18ம் தேதி) மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 170 குவின்டாலும், கிழங்கு ரகம் 40 குவின்டாலும் என மொத்தம் 210 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை சென்னூர், தொண்டாமுத்தூர், தென்னமநல்லூர் டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். இவை அனைத்தும் விற்பனையானது. இதை கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இதில் விரலி

மஞ்சள் குவின்டால் ரூ.6,004 முதல் ரூ.8,009 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.7,500. கிழங்கு மஞ்சள் ரூ.6,309 முதல் ரூ.7,859 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.6,800. இரண்டு வகை மஞ்சளும் சேர்த்து மொத்தம் ரூ.15.47 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.10.28 லட்சம் அதிகமாகும். கடந்த ஏலத்தை காட்டிலும் விரலி மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.200 அதிகரித்துள்ளது. கிழங்கு மஞ்சள் அதே விலையில் உள்ளது. கடந்த வாரத்தை காட்டிலும் வரத்தும், விற்பனையும் அதிகரித்துள்ளது.

**தரமான காய்கறி நாற்றுகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

ஜீயபுரம், : சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனை செய்யப்படும் காய்கறி நாற்றுகளை வாங்கி பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தக்காளி, கத்தரி, மிளகாய் உள்ளிட்ட காய்கறி நாற்றுகள் குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது.தரமான காய்கறிகளை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான நாற்றுகளை வாங்கி பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலை பேசி 04312614417, 2614457 எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முருங்கைக்காய் வரத்து குறைவு கிலோ ரூ. 170 க்கு விற்பனை**

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் முருங்கைகாய் வரத்து குறைந்ததால் கிலோ ரூ. 170 க்கு விற்கப்பட்டது.முருங்கையில் இரும்பு சத்து அதிகம் உள்ளது. வெப்பம் மிகுந்த பகுதிகளில் சூட்டினை தாங்கிக்கொண்டு வளரும் மரமாகும். குறுகிய காலத்தில் நிறைந்த பலனை தரும் முருங்கை அனைத்து வீடுகளில் உள்ள தோட்டங்களிலும் காணப்படும்.

நட்டுவைத்த 3 மாதத்திலிருந்து பலன் தரும் என்பதால் இதை வளர்ப்பதில் பெரும்பாலானவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர். விற்பனைக்காக ◌ோதாட்டங்களில் ஒட்டுரக முருங்கை ஏராளமாக வளர்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் முருங்கை அதிக அளவில் காய்த்து தொங்கும். திருமணம் உட்பட விசேஷ நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் சாம்பார் உட்பட குழம்பிற்கு முருங்கைக்காய் சேர்த்தால்தான் அது தரமாக இருக்கும் என்ற எண்ணம் எல்லோர் மத்தியிலும் உள்ளது. எனவே முருங்கைக்காய் இல்லாத சாம்பாரை விருந்துகளில் பார்க்க முடியாது. வரத்து குறைவாக இருக்கும்போது சந்தையில் முருங்கை விலை துாள் கிளப்பும். சாதாரண நாட்களில் ரூ. 10 க்கு அதிகபட்சமாக 4 முருங்கை வரை விற்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், இடையக்கோட்டை, ஈசாநத்தம், வேடசந்துார், குஜிலியம்பாறை பகுதிகளில் முருங்கை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. செடி முருங்கை, நாட்டு முருங்கை என இதில் இரண்டு வகையுள்ளது. தற்போது செடிமுருங்கையை மக்கள் அதிக அளவில் விரும்பி உண்கின்றனர்.தற்போது மழைக்காலம் துவங்கியுள்ளதால் முருங்கை வரத்து குறைந்துள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு டன் முருங்கைமட்டுமே சந்தைக்கு கொண்டுவரப்படுகிறது. திண்டுக்கல் காய்கறி மார்க்கெட்டில் நேற்று முருங்கை கிலோ ரூ. 150 க்கு விற்கப்பட்டது. சில்லரை கடைகளில் கிலோ ரூ. 170 க்குவிற்கப்பட்டது. வியாபாரி முருகன் கூறுகையில்,''தற்போது சீசன் இல்லாததால் முருங்கை விலை அதிகரித்துள்ளது,'' என்றார்.

**கொடைக்கானலில் சீசனுக்கு பின்பு பூத்துகுலுங்கும் மலர்கள்**

கொடைக்கானல், : கொடைக்கானலில் கோடையில் நடந்த மலர்கண்காட்சியில் பூக்காத பல செடிகள் தற்போது பூத்து குலுங்கி

வருகின்றன.மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுப்பது வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் பிரையண்ட் பூங்காதான். நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடவுசெய்யும் மலர் செடிகள் கோடை சீசனில் பூத்து குலுங்கும். சுற்றுலா பயணிகள் பார்த்திராத பல வண்ண செடிகள், பூக்கள் இந்த மலர்கண்காட்சியில் ஆண்டுதோறும் இடம்பெறும். இந்த ஆண்டு மே மாதம் கோடை சீசனில் பெரும்பாலான மலர்கள் பூக்கவில்லை. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் மலர்கள் உதிரும் காலமான ஜூன் மாதத்தில் அனைத்து மலர்களும் பூத்து குலுங்குகின்றன. சனி, ஞாயிறு விடுமுறையில் வரும் சுற்றுலா பயணிகள் இந்த பூக்களை கண்டு மனம் மகிழ்ந்தவாறு செல்கின்றனர்.

**சாரல் மழையால் மாம்பழத்தில் கரும்புள்ளி விற்பனை மந்தம்**

நத்தம், : சாரல் மழையால் மாம்பழங்களில் கரும்புள்ளிகள் அதிக அளவில் காணப்படுவதால் விற்பனையாகாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.நத்தம் பகுதியில் புன்னப்பட்டி, செந்துறை, சமுத்திராபட்டி, குட்டுப்பட்டி, வத்திபட்டி, காசம்பட்டி, வேம்பார்பட்டி, ராமராஜபுரம், அஞ்சுகுழிப்பட்டி, சிறுகுடி, அரவங்குறிச்சி உட்பட 100 க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்குள்ள விளைநிலங்களில் மா சாகுபடி அதிக அளவில் செய்யப்பட்டுள்ளது. விளைந்த மாங்காய் மற்றும் மாம்பழங்கள் பல்வேறு மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படும்.தற்போது மாம்பழ சீசன் துவங்கியிருப்பதால் விவசாயிகள் அவற்றை பறித்து விற்பனைக்காக இருப்பு வைத்து வருகின்றனர். கடந்த மாதம் இப்பகுதியில் பெய்த தொடர் சாரல் மழையால் மரங்களில் இருந்த மாங்காய்களின் தோல்பகுதி கருப்பு நிறமாக மாறியது. இதனால் மாம்பழங்கள் நிறம்குன்றி காணப்படுகிறது. வியாபாரிகள் இந்த

பழங்களை வாங்குவதில் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் எதிர்பார்த்த விலை மற்றும் விற்பனை இல்லாமல் அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்லாமை ரகம் கிலோ ரூ. 10 க்கும், காளப்பாடி ரகம் ரூ.20 க்கும், பாலாமணி மற்றும் செந்துாரம் ரகம் ரூ. 8 க்கும், பங்கனவல்லி ரூ. 12 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து இப்பகுதியை சேர்ந்த மா, தென்னை, புளி விவசாயிகள் அமைப்பு குழு தலைவர் கண்ணுமுகமது கூறுகையில்,''கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் மாமரங்கள் அதிகஅளவில் பூக்கவில்லை. இருப்பினும் அவ்வப்போது பெய்த மழையால் ஓரளவிற்கு காய்கள் காய்த்திருந்தன. தற்போது பழங்கள் நல்ல நிறத்தில் இருந்தாலும் கரும்புள்ளியால் விலைபோகாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்,'' என்றார்.

**அடர்நடவு கன்றுகளுக்கு மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு**

நத்தம், : அடர்நடவு கன்றுகளுக்கு மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதால் விவசாயிகள் அதற்கான விண்ணபத்தினை வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் ஏராளமான விவசாயிகள் மா, கொய்யா சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களை ஊக்குவிப்பதற்காக அடர்நடவு கன்றுகளை மானியத்தில் வழங்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. விவசாயிகள் தங்கள் நிலத்திற்குரிய சிட்டா, பட்டா மற்றும் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் விண்ணப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.இதுகுறித்து உதவி இயக்குநர் சசிகலா கூறுகையில்,''கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் நத்தம் பகுதியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் நலன்கருதி மா, கொய்யா கன்றுகள் மானியத்தில் வழங்க முடிவு

செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் காலதாமதம் செய்யாமல் இவற்றை பெற்று பயனடைய வேண்டும்,'' என்றார்.

**நாவல்பழம் சீசன் துவக்கம் கிலோ ரூ.240க்கு விற்பனை**

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் மருத்துவ குணம் கொண்ட நாவல்பழம் சீசன் துவங்கியுள்ளது. வரத்து குறைவால் ஒரு கிலோ ரூ.240க்கு விற்கப்படுகிறது.கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் சி, வைட்டமின் பி, புரதச்சத்து, மாவுச்சத்து அதிகம் கொண்டது நாவல்பழம். இந்தியாவை தாயகமாக கொண்ட இப்பழம் வெப்பமண்டலப் பகுதிகளில் அதிகம் காணப்படும். மழைக்காலங்களில் நாவல்பழம் சீசன் துவங்கும்.உருண்டை, நீள ஆகிய இரண்டு வடிவங்களில் உள்ள பழத்தில், நீளவடிவ பழம் அதிக சுவையுடையதாக இருக்கும். உடலுக்கு குளிர்ச்சியை தரும் இந்த பழம் வருடத்தின் சில மாதங்கள் மட்டுமே கிடைக்கும். சர்க்கரை, மூல நோய்களுக்கு அருமருந்தாக விளங்குகிறது. பழம் மட்டுமல்ல, கொட்டைகளும் மருந்துக்கு பயன்படுத்தப்படுகிறது.நாவல்பழம் பெண்களுக்கு மலட்டு தன்மையை குணப்படுத்தும் தன்மை உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஆயக்குடி, மன்னார்குடி, நத்தம் ஆகிய பகுதிகளில் நாவல் பழ மரங்கள் அதிகளவு உள்ளது.திண்டுக்கல்லில் காட்டாஸ்பத்திரி, மெயின் ரோடு, பஸ் ஸ்டாண்டு பகுதிகளில் நாவல் பழம் விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூர் பழங்கள் வரத்து இல்லாததால், தற்போது ஒசூர் பழங்கள் மட்டுமே விற்பனைக்கு வந்துள்ளது. இதனால் கிலோ ரூ.240க்கு விற்பனையாகிறது.வியாபாரி குருசாமி கூறுகையில், இப்போது ஒட்டு ரகத்தை சேர்ந்த ஓசூர் பழங்கள் மட்டுமே விற்பனைக்கு வந்துள்ளது. பழங்களின் வரத்து குறைவாக இருப்பதால் கிலோ ரூ.240 வரை விற்கப்படுகிறது. நாள்தோறும் 35 கிலோ எடையுள்ள 10 கூடைகள் மட்டுமே வருகிறது. அடுத்த மாதம் ஆயக்குடி, நத்தம் பழங்கள்

வரத்துவங்கும் போது விலை குறையும் என்றார்.டாக்டர்கள் கூறுகையில், நாவல்பழத்தை அளவோடு சாப்பிடவேண்டும். அதிகமாக சாப்பிட்டால் இருமல், தொண்டைக் கட்டுதல் ஏற்படும். பழமாகவோ, பழச்சாற்றையோ வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. பழம் சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் 3 மணி நேரத்திற்கு பால் அருந்தக்கூடாது என்றனர்.

**பண்ணைக்குட்டைகள் அமைத்து பயன்பெற விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

சிவகங்கை, : பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து சிவகங்கை மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் இதுவரை ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை மழைக்காலங்களில் நீர் நிறைந்து காணப்படுகிறது. இந்த நீரைப் பயன்படுத்தி நெல் உள்ளிட்ட பயிர்கள் விவசாயமும், மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழமரக்கன்று விவசாயமும் செய்யப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் இளையான்குடி, சிவகங்கை, மானாமதுரை, திருப்புவனம் வட்டாரங்களில் மா, எலுமிச்சை, பப்பாளி, சப்போட்டா மரக்கன்றுகளை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். சில பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்த்து வருமானம் ஈட்டுகின்றனர். பண்ணைக்குட்டைகளினால் விவசாயிகள் நன்கு பயனடைந்து வருகின்றனர். நீர்வடிப்பகுதி விவசாயிகள் அனைவரும் பண்ணைக்குட்டைகளில் நீரினை விவசாயம், பழமரக்கன்று வளர்ப்பிற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விவசாயிகள் வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை அணுகி விபரங்களை அறிந்து புதிதாக

பண்ணைக்குட்டைகள் அமைத்து பயனடைய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் ஜூன் 26ல் நடக்க உள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் ஜூன் 26ம் தேதி காலை 11 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

**இயற்கை விவசாயம் செய்வதற்கு வேளாண் கருவிகள் மான்யத்தில் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

கரூர், : இயற்கை முறையிலான விவசாயம் செய்வதற்கு வேளாண் கருவிகள் மான்யத்தில் வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது, இதில் விவசாயிகள் கூறியது. முத்துசாமி: இயற்கை முறையிலான விவசாயம் செய்வதற்கான வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்கவேண்டும். தங்கவேல்: வேளாண் மற்றும் பண்ணைக்கருவிகள் மானியத்தில் வழங்க வேண்டும். பெரியசாமி:பாலராஜபுரத்தில் மின்மாற்றியை மாற்றி தொய்வின்றி மின்சாரம் வழங்கவேண்டும்.முருகேசன்: காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாயை ஜேடர்பாளையத்தில் இருந்து துவங்கி தோகமலை மற்றும் விராலிமலை வழியாக கொண்டு சென்று ஏரி

குளங்களுக்கு நீர் வழங்கவேண்டும். அரியாற்றில் இருந்து வடசேரிக்கு வரும் வரத்து வாய்க்கால்களை தூர்வாரவேண்டும் என்றார். அதிகாரிகள், வடசேரி பெரிய குளத்தை தூர்வாரும் பணிக்காக ரூ.1கோடியே 98லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அரசு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.சந்திரசேகர், ராஜகாந்தம்: கரைவலசு பசுபதிபாளையம் நபார்டு திட்டத்தில் தார்சாலை அமைக்க வேண்டும். வட்டாரவளர்ச்சிஅலுவலர்: மொஞ்சனூர் ஊராட்சி கரைவலசு முதல் பசுபதிபாளையம் வரை விடுபட்ட பகுதியில் தார்சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.20லட்சம் ஆகும். போதிய நிதியில்லாததால் முன்னுரிமை அடிப்படையில் சாலைவசதி செய்யப்படும். பட்டா மாறுதல் செய்ய காலதாமதம் செய்யப்படுகிறது. ஜமாபந்தியில் அளித்த மனுக்கள் கூட ஒருமாதமாக நிலுவையில் உள்ளது விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். கலெக்டர் ஜெயந்தி, பட்டா மாறுதல் பணிகளை இசேவை மையத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார். மின்வாரியத்தினர் கூறுகையில், கடந்த 2009ம்ஆண்டு வரை விண்ணப்பித்த விவாசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. டெபாசிட் செலுத்தியோருக்கு சுமார் 10ஆயிரம் இணைப்புகள் கொடுக்கப்பட இருக்கிறது என்றனர்.

## மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண் துறை விளக்கம்

அன்னவாசல், : மானாவாரி நிலக்கடலை யில் கூடுதல் மகசூல் பெறுவது குறித்து வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம், உழவர் பயிற்சி

நிலையத் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். உயர் விளைச்சலுக்கு டிஎம்வி 7, விஆர்ஜ 2 ரகங்கள் கூடுதல் மகசூலைத் தரவல்லவையாகும். இதற்காக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 55 கிலோ நிலக்கடலை பருப்பு விதைப்புக்கு தேவைப்படும். விதைப் பருப்புகளை டிரைக்கோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர்ப் பூசனக் கொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் அல்லது சூடோமோனாஸ் புளொரசன்ஸ் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் விதைப்புக்கு சற்றுமுன் நன்கு கலந்து விதைக்க வேண்டும். ரைசோபியம் உயிர் உரத்தை ஏக்கருக்கு ஒரு பாக்கெட் வீதம் அரிசி வடிகஞ்சியுடன் கூழ்போலக் கலக்கிவைத்து அதில் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைப் பருப்புகளை நன்கு கலந்து நிழலில் உலர்ந்த பிறகு வயலில் விதைக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்வதால் வேர் அழுகல் மற்றும் வாடல் நோய் தடுக்கப்பட்டு விதை முளைப்புத் திறனும் அதிகரிக்கும். வேர் அழுகல், வாடல் நோய்களை வந்த பிறகு கட்டுப்படுத்துவது கடினம். வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியும் செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். ஒரு பெரிய சைக்கிள் டயருக்குள் 11 செடிகள் இருக்குமாறு விதைப்புச் செய்யவேண்டும். பயிர் எண்ணிக்கையை சரியான முறையில் பராமரித்தால்தான் மகசூல் கூடுதலாகக் கிடைக்கும். விதைப்பு முடிந்தவுடன் ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்சத்தை 15 கிலோ மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண்டும். அதே வேளையில் இதை அடியுரமாக இடக் கூடாது. நிலக்கடலை நுண்சத்து இடுவதால் நிலக்கடலை திரட்சியாகவும், பொக்கற்றதாகவும் கிடைப்பதால் கூடுதல் லாபம் கிடைக்கும்.நிலக்கடலை ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஏக்கருக்கு தலா 4 பாக்கெட்டுகள் வீதம் 10 கிலோ தொழு

உரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து வயலில் இடவும். இதனால் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு அளிக்கும். அதன் மூலம் 25 சதவீதம் தழைச்சத்து இடுவதை குறைத்துக் கொள்ளலாம். ஒரு பொட்டலத்தின் விலை ஆறு ரூபாய் மட்டுமேயாகும். இது அனைத்து வட் டார வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும். பூச்சி, நோய்களின் தாக்குதலை குறைக்க ஊடுபயிர் சாகுபடி செய்வது அவசியம். ஊடுபயிராக துவரை, உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயிர்களை 4:1 என்ற விகிதத்தில் அதாவது 4 வரிசை நிலக்கடலைக்கு ஒரு வரிசை ஊடுபயிர் என்ற வீதத்தில் விதைக்க வேண்டும் என்றனர்.

**பூச்சிக்கொல்லி மருந்துகளை பரிந்துரைத்த அளவே தெளியுங்கள் வேளாண்துறை அதிகாரிகள் வலியுறுத்தல்**

தேவதானப்பட்டி, : விளை நிலங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பரிந்துரை செய்த அளவிலே தெளிக்க வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண்துறை அதிகாரிகள் வலியுறுத்தினர். தேவதானப்பட்டி அருகே கெங்குவார்பட்டி பேரூராட்சி பாலப்பட்டியில் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் மக்கள்தொடர்பு முகாம் நடைபெற்றது. இதில் அந்தந்த துறை சார்பில் அதிகாரிகள் பங்கேற்று தங்களது திட்டங்களை மக்களுக்கு எடுத்து கூறினர். அப்போது வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘‘ தேனி மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி அதிகமாக செய்யப்பட்டு வருகின்றது. இதில் காய்கறிகள் அதிகளவில் அண்டை மாநிலமான கேரளாவிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களாக கேரள அரசு, தமிழகத்தில் இருந்து வாங்கப்படும் காய்கறிகளில் அதிக அளவு நச்சுத்தன்மை உள்ளது. இதனால் மக்களுக்கு நோய் தாக்கும் அபாயம் இருப்பதாக தெரிவித்து உள்ளது. இதற்காக மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் அரசினால் தடை செய்யப்பட்ட மருந்துகள் உள்ளதா என அதிகாரிகள் ஆய்வு நடத்தி

வருகின்றனர். தடை செய்த மருந்துகள் விற்பனை செய்தால் அக்கடையின் உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் காய்கறி பயிர்களுக்கு மருந்து தெளிக்க வேண்டுமானால் முதலில் அருகில் உள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை கலந்து ஆலோசியுங்கள். அவர்கள் பரிந்துரை செய்யும் அளவு மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தா என உறுதி செய்த பின்பே பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். பயிர்களில் அதிக அளவு பூச்சி தாக்குதல் இருந்தால் அதிகாரிகளை அழைக்கலாம். பூச்சி தாக்குதல் குறித்து ஆலோசனை மற்றும் மருந்து பரிந்துரை செய்வார்கள் என்றனர்.

**சேத்தூரில் நெல் கொள்முதல் மையம் திறப்பு**

ராஜபாளையம், : தினகரன் செய்தி எதிரொலியாக சேத்தூரில் அரசு நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ராஜபாளையம் அருகே சேத்தூரில் கோடையில் 2 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. எதிர்பார்த்ததற்கு மேலாக இந்த ஆண்டு கோடை மழை கொட்டியதால் மகசூலும் அதிகரித்தது. ஆனால், விளைந்த நெல்லை குறைந்த விலைக்கு நீண்டநாள் கடனுக்கு வாங்க வியாபாரிகள் காத்திருந்தனர். ஏற்கெனவே வாங்கிய நெல்லுக்கே இன்னும் பணம் கிடைக்காத நிலையில், தனியார் வியாரிகளிடம் நெல்லை விற்க விவசாயிகள் தயாராக இல்லை. இந்தப் பிரச்னைக்கு ஒரேவழி சேத்தூரில் அரசு நெல் கொள்முதல் மையத்தை மீண்டும் திறக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் அம்மையப்பன் தலைமையில் விவசாயிகள் வலியுறுத்தினார். விரைவில் திறப்பதாக அதிகாரிகள் தரப்பில் பதில் அளித்தபோதிலும் கொள்முதல் மையம் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் விளைந்த நெல்லை அறுவடை செய்யாமல் இருந்தனர்.இது குறித்து தினகரனில் நேற்று முன்தினம் செய்தி

வெளியானது.இதன் எதிரொலியாக அரசு சார்பில் சேத்தூரில் நேற்று நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டது. மையத்தை திறந்துவைத்த நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் உதயகுமார் அப்போது கூறுகையில், “சேத்தூரில் கொள்முதல் செய்யப்படும் நெல் மோட்டா ரகம். குவிண்டாலுக்கு ரூ.1410, சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ.1470 என விலை நிர்ணயம் செய்து நெல் கொள்முதல் செய்யப்படும். இதற்கான பணம் அன்று மாலையே ரொக்கமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்” என்றார்.நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டதால் மகிழ்ச்சி தெரிவித்த விவசாயிகள், நெல்லை அறுவடை செய்து கொள்முதல் மையத்திற்கு நேற்றே அனுப்பத் தொடங்கினர்.

**மானாவாரி பயிர்களுக்கு மண் பரிசோதனை அவசியம் விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், மானாவாரி பயிர்களுக்கு மண் பரிசோதனை செய்வது மிக அவசியம் என வேளாண் அறிவியல் மைய அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். இது குறித்து ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரிப் பயிர்களாக பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்டவை ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படவுள்ளது. தற்பொழுது கோடை உழவுப்பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த சூழலில் பருத்தி, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு மண் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் உரமிடுதல் மிகமிக அவசியமாகும்.மண் பரிசோதனை செய்வதற்கு தொழு எரு மற்றும் அடியுரம் இடும் முன்னர் ஒரு ஏக்கரில் ஆங்காங்கே 4 அல்லது 5 இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்களில் உள்ள மேல் மண்ணை லேசாக எடுத்துவிட்டு, 15செமீ ஆழத்திற்கு ஏ வடிவத்தில் குழி எடுத்து,

பிறகு இருபுறமும் சரித்து அதிலிருந்து 500கிராம் அளவிற்கு மண்ணை சேகரிக்க வேண்டும்.பிறகு அனைத்தையும் ஒன்றாக சேர்த்து கலக்கி பகுத்து பிரித்தல் முறையில் 500 கிராம் அளவிற்கு குறைத்து மண் மாதிரியை சேகரிக்க வேண்டும். சேகரித்த மண் மாதிரியுடன் விவசாயி பெயர், முகவரி, நில அளவை எண், முன் மற்றும் பின் பருவ பயிர்கள், தொலைப்பேசி எண் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு, மண் ஆய்வுக் கூட்டத்தில் கொடுக்கவேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரம் ரோவர் வேளாண் அறிவியல் மையம், மாவட்ட மண் பரிசோதனைக்கூடம், நடமாடும் மண் பரிசோதனைக்கூடம் ஆகியவற்றில் பரிசோதனை செய்துகொள்ளலாம். மேலும் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்கள், வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகங்களில், வேளாண் உதவி அதிகாரியிடம் கொடுத்து மண் ஆய்வு முடிவுகளைப் பெறலாம். மண் ஆய்வுக் கூடத்தில் மண் பரிசோதனைக்குப் பிறகு மண் பரிசோதனைக் கையேடு வழங்கப்படும். இந்தக் கையேட்டில் வயலில் உள்ள சத்துக்களின் அளவுகளும், பயிரிடப்படும் பயிரிருக்குத் தேவையான உரத்திற்கான பரிந்துரைகள், அடியுரம் முதல் மேலுரம், 2வது மேலுரம் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும். இதன் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வயலுக்குத் தேவையான உரமிட்டு, அதன் மூலம் கூடுதல் மகசூலைப் பெற்று லாபம் அடையலாம். இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு வாலிகண்டபுரத்திலுள்ள ரோவர் வேளாண் அறிவியல் மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.